-5 MAR 2000
மாநகராட்சி மன்றம்

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 21 ஞாயிற்றுக்கிழமை (05 - 03 - 2000) VALAMPURI ஒலி: 77

## ★ அரசமைப்புச் சீர்திருத்தம் குறித்து

# ஜனாதிபதியின் அழைப்பை ரணில் ஏற்றுக் கொண்டார்!

## ஒன்பதாம் திகதி சந்திப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்விற்கான அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில்விக்கிரமசிங்க ஜனாதிபதியின் அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அலரிமாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவிற்கும் ரணில்விக்கிரமசிங்கவிற்குமிடையே பேச்சு வார்த்தை நடைபெறவுள்ளது.

அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாசப் பேச்சுக்கள் நடாத்த இம்மாதம் 9ஆம் திகதிஅலரிமாளிகைக்கு வருமாறு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க விடுத்த அழைப்பினை எதிர்க்கடசித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேசுவது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் காமினி அத்துக்கோறள, ரணில் விக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இனப்பிரச்சினைத் தீர்வில்

## நோர்வேயின் சமாதான முயற்சிக்கு நான்கு பௌத்த பீடங்கள் எதிர்ப்பு!

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வு குறித்து நோர்வே அரசு எடுத்துவரும் நல்லெண்ண முயற்சிகளுக்கு சிங்கள பேரினவாத பௌத்த பீடாதிபதியினர் நேற்று கொழும்பில் கூடி எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பௌத்த பீடங்களானஅஸ்கிரிய, மல்வத்தை, அமரபுர சியம்ப் ஆகியவற்றின் பிரதிநிதிகளே நேற்று கொழும்பில் கூடி முடிவு செய்திருந்தனர்,

பௌத்த பீடாதிபதிகளின் நேற்றைய கூட்டத்தில், இலங்கையின் இனப்பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை. அதில் வெளிநாட்டுத் தலையீடு அவசியமற்றது என்றும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளதுடன் நோர்வே சமாதான முயற்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கும் அரசின் போக்கையும் கண்டித்துள்ளனர்.

இது இவ்வாறு இருக்க இரு வாரங்களுக்குமுன் சிங்களப் பேரினவாதக் கட்சிகளான பூமி புத்திர கட்சி, வீர விதான அமைப்பு உட்பட 15 அமைப்புக்கள் நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை தெரிந்ததே! (வ)

## அரசு - தமிழ்க் கட்சிகள் பேச்சு தொடர்ந்து நடைபெறாது

அரசியலமைப்புச்சீர்திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவிற்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்குமிடையில் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடைபெறமாட்டாதென அரசவட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதிக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்குமிடையே ஐந்து கட்டங்களாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது சில விடயங்களில் இணக்கம் காணப்பட்டு பல விடயங்களில் இணக்கம் காணப்படாதிருந்ததும் காரணம்,

### ஜனாதிபதி தேர்தல்ஆட்சேபணைமனு

## பிரதம நீதியரசர் தலைமையில் 7ஆம் திகதி விசேட கூட்டம்

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவானதை எதிர்த்து ஐ. தே. க. தாக்கல் செய்த மனு தொடர்பாக அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராய்வதற்காக விசேட கூட்டம் ஒன்று பிரதம நீதியரசர் தலைமையில் எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்குமனுவைத் தாக்கல்செய்தஐ.தே.க.பொதுச் செயலர் காமினி அத்துக்கோறள, பிரதிவாதிகளான ஜனாதிபதி, தேர்தல் ஆணையாளர் சார்பாக ஆஜராகும் சட்டத் தரணிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (வ. த]

## கறுப்புச்சீலை மூடியபஸ்ஸில் பயணம்

(மன்னார்)

மகாசிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீஸ்வரஆலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட பக்தர்கள் சென்ற வாகனத்தின் கண்ணாடிகள் கறுப்புநிற திரைச் சேலையால் மூடியநிலையிலேயே அழைத்துச்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அல்லாரையில் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி

(சாவகச்சேரி)

மீசாலைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 7-30 மணியளவில் மீசாலைக் கிழக்கு அல்லாரை தமிழ்க் கலவன் பாடசாலைக்கு முன்பாக சைக்கிளில் வந்த இளைஞர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மாமுனைக் கடலில் மீன்பிடிக்கும் நேரம் இரண்டு மணித்தியாலத்தால் குறைப்பு!

(வடமராட்சி)

வடமராட்சிக் கிழக்கு மாமுனைப்பகுதிகளில் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் மீன்பிடிநேரம் அதிகாலை 2மணித்தியாலத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் அதிகாலை 2மணிமுதல் பகல் 10மணிவரையும் மீன்பிடிப்பதற்கு இராணுவத்தினர் அனுமதித்திருந்தனர்.

எனினும் இன்றுமுதல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாலுசந்தி மண்டைஓடு சர்ச்சை மனிதநேய அமைப்புக்களின் கவனத்திற்கு

(நெல்லியடி)

மாலுசந்திப்பகுதிக்கருகில் காணப்பட்ட இரு மண்டை ஓடுகள் தொடர்பாக போ. பூரணம் பிள்ளை என்பவர் கிராமசேவகரின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து கிராமசேவகர் அது பற்றிபொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து நேற்றுக் காலை ஒன்பது மணிக்கு பொலிஸார் கிராமசேவகர் சகிதம் மண்டையோடுகளை சென்று பார்வையிட்டதுடன் அது காலங்கடந்த மண்டை ஓடுகள் எனவும் அவற்றைப் புதைக்கும் படியும் அயலவரான பூரணம் பிள்ளையிடம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் தூதுவர் லின்டாடுவில் இரு வாரங்களில் யாழ்நகர் விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் லின்டாடுவில் இன்னும் இரு வாரங்களில் யாழ்ப்பாணம் வரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் வரவிருக்கும் பிரிட்டிஷ் தூதுவர் லின்டாடுவில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், யாழ். மாநகர சபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் ஆகியோரையும் மற்றும் திணைக்கள அதிகாரிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இவர் யாழ். குடாநாட்டின் பலபகுதிகளுக்கும்விஜயம் செய்து அபிவிருத்திப் பணிகளையும் குடா நாட்டின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### திருக்கேதீஸ்வரத்தில் இருந்து

## இராணுவம் முற்றாக வெளியேறியது

## அரைக்கிலோமீற்றர் தூரத்தில் முகாம்

மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இருந்தும், ஆலய சுற்றாடல் பகுதியில் இருந்தும் இராணுவம் முற்றாக வெளியேறி அரைக்கிலோ மீற்றர் தூரத்தில் இருப்பதாக மன்னார் அரச அதிபர் எஸ், விஸ்வலிங்கம் தெரிவித்துள்ளார்,

இராணுவத்தின் இந்த வெளியேற்றத்தைத் தொடர்ந்து மன்னார் உதவி அரசாங்க அதிபர், மன்னார் பிரதேச சபையுடன் இணைந்து ஆலய சுற்றாடல் பகுதிகளை சுத்தம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் உள்ள சம்பத்தர் மடத்தில் இருந்தும் இராணுவம் முற்றாக வெளியேறியுள்ளது

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

**A/L இணைந்த கணிதம்**

அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் இணைந்த கணிதம், தூயபிரயோக கணிதம், பௌதிகவியல் மிகச்சிறப்பாகக்கற்பிக்கப்படும். 20 வருட வினாத்தாளும் செய்து கொடுக்கப்படும், முழு பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் முடிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும். R பாலசுப்பிரமணியம் B.Sc (Cey) Dip in Ed. 17/1, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (சி-111)

**ஆடு விற்பனைக்கு உண்டு**

நல்லின யமுனாப்பாரி கடாக்கள், மற்றும் மறி ஆடுகள். குட்டிகள், வான்கோழிகள் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:- S.P தாஸன்
இல 75, செட்டித்தெரு, நல்லூர். (சி-113)

# இலங்கையில் மலேரியா நோயை ஒழிக்கும் முயற்சி படுதோல்வி

## -வைத்திய கலாநிதி தெரிவிப்பு

(தென்மராட்சி)

மலேரியா நோயை இலங்கையிலிருந்து ஒழிப்பதற்கு பல மில்லியன் அமெரிக்க டொலர்கள் உலக சுகாதார நிறுவனத்தினால் வழங்கப்பட்டது. எனினும் அனைத்து முயற்சிகளும் திட்டங்களும் படுதோல்விகளையே சந்தித்துள்ளன.

மேற்கண்டவாறு வைத்திய கலாநிதி ஈ. எஸ். தேவசகாயம் உரையாற்றினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, யாழ்ப்பாண விஞ்ஞான சங்க ''ஏ'' பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ''மலேரியா கட்டுப்பாடும் அதன் இன்றைய நிலையும்'' என்னும் விடயம் பற்றி பௌதிகவியல் மண்டபத்தில் நிகழ்த்தப்பட்ட உரையின் போது, இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர். குமாரவடிவேல் தலைமையில் இந்த உரை நிகழ்வு இடம்பெற்றது.

வைத்தியக் கலாநிதி ஈ.எஸ். தேவசகாயம் தனதுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

மலேரியா நோய் இன்னும் இந்நாட்டில் ஒரு பொதுவானதும், உயர்ந்தநிலையிலும் இருக்கின்ற ஒருநோயாகவுள்ளது. மலேரியா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களின் இரத்தத்தினை நன்கு பரிசோதித்த பின்னரே மலேரியா நோயினால் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளார் என தீர்மானத்துக்கு வருதல் வேண்டும்.

மலேரியா நோய் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

மலேரியா நோயைக் கட்டுப்படுத்த டி.டி.ரி மருந்து தெளிக்கும் பணிக்கு மக்கள் போதிய ஆதரவு வழங்குவதில்லை இது தவிர்க்கப்பட வேண்டும்.

எனவே மலேரியா நோயின் பரவலைத் தடுப்பதற்கும் குறைப்பதற்கும் ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும்என அவர் மேலும் தெரிவித்தார். (க-77)

# (இராசி பலன்)

05.03.2000
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு மாசி - 22)

சதுர்த்தசி காலை 11.25 வரை, சதயம் முழுநாளும். சித்தயோகம், இராகுகாலம் மாலை 5.26 முதல் 6.55 வரை சுபநேரம் காலை 9.53 முதல் 11.21 வரை, அமாவாசை விரதம்.

**மேடம்:**
நண்பர்வரவு, பொருள் உதவி, தீர்க்கதரிசனம்.

**இடபம்:**
திருமணயோகம், இனிய சம்பாசனை, பிறர் உதவி.

**மிதுனம்:**
குற்றம்காணல், தெளிவற்ற நிலை, அலைச்சல்.

**கடகம்:**
வயிற்றில்ரோகம், மனச்சுமை, கோபதாபம்.

**சிங்கம்:**
லாபப்பெருக்கம், புத்திரர் சிறப்பு, பயணம்.

**கன்னி:**
கடன்வசூல், கற்பனை மிகுதி, குருஆசி.

**துலாம்:**
பெண்சபலம், அடாவடித்தனம் பிறர் கவலை.

**விருச்சிகம்:**
மனைவி கோபம், வாய்ச்சண்டை, வெறுப்பு.

**தனுசு:**
பெரியோர் தொடர்பு, தொழில் வாய்ப்பு, சமயோசிதம்.

**மகரம்:**
கருத்துவேற்றுமை, கபடத்தனம், புதியதுக்கம்.

**கும்பம்:**
இசைத்துறை ஆர்வம், குடும்பமகிழ்ச்சி, நற்செய்தி.

**மீனம்:**
பெற்றோர் கவலை, தொழில் மந்தம், வாகனச் செலவு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

## தொடரும் கருத்தரங்கு

(புலோலி)

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாடு விளையாட்டுத்துறை அமைச்சு வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள க.பொ.த(உயர்) தர வகுப்பில் கல்வி கற்பிக்கும் கலை வர்த்தக வள ஆளணியினருக்கான திட்டமிடல் கருத்தரங் கொன்று வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சில் கடந்த 3 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை நடைபெற்றது.

வடமாரட்சி கல்வி வலயத்திலிருந்து புவியியல் பாடத்திக்கு திருமதி எஸ். இரங்கன் (பரு. மெ. பெ. உயர்தரப் பாடசாலை) பொருளியல் பாடத்திற்கு திரு. எஸ். சிவநந்தன் (பரு. ஹாட்லி கல்லூரி) வர்த்தக பாடத்திற்கு எஸ். ஜெகநாதன் (பரு. வேலாயுதம் மகா வித்தியாலயம்) கணக்கியல் பாடத்திற்கு திரு. எஸ். பரராஜசிங்கம் (பரு. ஹாட்லி கல்லூரி) ஆகியோர் பங்கு பற்றினர். (க-52)

## கலைப்பீட பரீட்சை

(வரணி)

யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர்களின் முதலாம் அரையாண்டுப் பரீட்சை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. மேற்படி பரீட்சைகள் பாடவிதான நேரத்தின்படி காலை 9.30 -12.30 வரையும் மாலை 1.30-4.30 வரையும் இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-28)

## அச்சுவேலிப் பகுதி நேற்று படையினரால் சுற்றிவளைப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலியின் சில பகுதிகளை நேற்று பொலிஸாரின் உதவியுடன் சுற்றிவளைத்த படையினர், அங்கு காலை 5.30 மணி முதல் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர்.

அச்சுவேலியின் பத்தமேனி, இடைக்காடு, வளலாய், தம்பாலை, கதிரிப்பாய் பகுதிகளிலேயே சுற்றிவளைப்பு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டது.

சுற்றிவளைப்பின் போது பொலிஸாருடன் வீடு வீடாகச் சென்ற படையினர் அங்கு உள்ளவர்களின் அடையாள அட்டைகள், குடும்பப் பதிவுகள் போன்றவற்றை பார்வையிட்டதுடன்.

அப்பகுதி இளைஞர் யுவதிகளை கைத்தொழிற் பேட்டைச் சந்தியில் அமைந்துள்ள இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் அவர்கள் மதியமளவில் விடுவிக்கப்பட்டள்ளனர். (க-57)

# 500 மருத்துவ பட்டதாரிகள் புதிதாக சேவையில் சேர்க்கப்படுவர்

(கொழும்பு)

இவ்வருடம், 500 மருத்துவ பட்டதாரிகளை உள்ளக பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ள இருப்பதாக சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

1992,1993 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இலங்கை மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் மருத்துவப் படிப்பை மேற்கொண்டு பட்டம் பெற்றவர்களே இவ்வாறு உள்வாங்கப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

மருத்துவ பட்டம் பெற்றவர்களை பணியில் இணைக்கும் முயற்சி எதிர்வரும் 10 ஆம் திகதி பொறளை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்வாறு பட்டம் பெற்று பணியில் இணைய விரும்புவோர் போராதனை, யாழ்ப்பாணம், ஸ்ரீ ஜெயவர்தனபுர மருத்துவ பீடங்களில் பட்டம் பெற்றவராயின் காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரையும் கொழும்பு, களனி, வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்றவராயின் பி.ப. 1 மணி தொடக்கம் 4 மணிவரையும் பொறளை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்குச் சமூகம் கொடுக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இதேசமயம்,

உள்ளக பயிற்சிகளில் சேர விரும்புவோர், பிறப்புச்சான்றிதழ் பல்கலைக்கழக அடையாள அட்டை, இலங்கை மருத்துவ மன்றத்தில் பதிவு செய்த அடையாள அட்டை ஆகியவற்றுடன் வருமாறும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் பணித்துள்ளார். (க-9)

# 11 கல்விக் கல்லூரிகளை புதிதாக நிறுவ நடவடிக்கை எடுக்கப்படுகிறது

## கல்வி உயர்கல்வி அமைச்சு தகவல்

நாட்டில் மேலதிகமாக 11 கல்விக் கல்லூரிகளை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வி உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் உட்பட ஐந்து இடங்களில் மேற்படி கல்லூரிகள் நிறுவப்படவுள்ளதாகவும் இப்பணியை நிறைவேற்றியதும் பெருமளவு மாணவர்கள் கல்வி கற்பதற்கு வ்ாய்ப்பு ஏற்படுமென்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-108)

## சாரதாம்பாள் கொலை தொடர்பான தகவல்களைத் தெரிவிக்கலாம்

## ஜனாதிபதி கமிட்டி உத்தரவு

(கொழும்பு)

புங்குடுதீவு சாரதாம்பாள் படுகொலைச் சம்பவம் தொடர்பாக ஏதாவது தகவல்கள் தெரிவிக்க விரும்பினால் பாராளுமன்ற கட்டடத்தின் 8 ஆம் இலக்க அறையில் எதிர்வரும் 6ஆம் திகதி காலை 11.30மணிக்கு சமூகமளிக்குமாறு ஜனாதிபதி கமிட்டி அவசர பணிப்புவிடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென யாழ்.மாநகரசபை உறுப்பினர்களான எஸ். அரவிந்தன், ரி. முகுந்தன் சி.சி. கஜேந்திரன் ஆகியோர் கொழும்பில் செயற்படும் தொல்லை தவிர்ப்புக்குழுவிற்கு விண்ணப்பித்தமையையடுத்து அதன் பிரதிகள் ஜனாதிபதிமற்றும் முக்கியஸ்தர்களுக்கும் அனுப்பியதைத் தொடர்ந்தே மேற்படி உத்தரவு விடுவிக்கப்பட்டுள்ளது. (க)

## அச்சுவேலி ஆஸ்பத்திரியில்

# கடந்த வருடம் மட்டும் 3967 பேருக்கு மலேரியா நோய் பீடித்துள்ளதாம்

## அதிகாரி தகவல்

[அச்சுவேலி]

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஆண்டு சிகிச்சை பெற்றோரில் சுமார் 3967 பேருக்கு மலேரியா நோய் ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டதாக வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; மலேரியா நோயை குணப்படுத்தும் மாத்திரைகளை நோயாளர்கள் ஒழுங்காக பாவிக்காததனாலேயே இந்நோய் வேகமாக பரவுவதாகவும் மேலும் தெரிவித்தார்.

நோய் பரவுவதற்கான ஏது நிலைகள் நீர்வேலி, சிறுப்பிட்டி, நவக்கிரி, அச்சுவேலி, இடைக்காடு ஆகிய பகுதிகளில் அதிகமாகக் காணப்படுவதும் கணிக்கப்படவேண்டிய ஒன்று என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க- 7)

## மீன் விற்பனை பொதுமக்களுக்கு இடையூறு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் றக்காவீதியோரங்களில்நடைபெறும்மீன் வியாபாரம் பொதுமக்களின் போக்குவரத்திற்கு சிரமத்தினை ஏற்படுத்தி வருகின்றது.

இப்பகுதியில் கூடும் வியாபாரிகள் மேற்படி பகுதியை மீன் விற்பனைப் பிரதேசமாக மாற்றியுள்ளனர்.

இதனால் இப்பகுதியின் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைவதோடு சுகாதார நிலையும் சீர்கெட்டுவருகின்றது. (க-59)

## பஸ் சேவை

(வடமராட்சி)

வடமராட்சிக் கிழக்கு மாமுனையூடாக செம்பியன் பற்று பகுதிக்கு கடந்த வெள்ளிக்கிழமை முதல்பஸ் சேவை நடாத்தப்படுகிறது.

இலங்கைப் போக்குவரத்து சபை பருத்தித்துறை டிப்போவிலிருந்து ''சீடிறைவ்'' ரக பஸ் சேவை தினமும் 3 தடவைகள் நடாத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5 வருடங்களிற்கு மேலாக யாழ். குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தும் இப்பகுதிக்கான பஸ் சேவை மேற்கொள்ளப்படாமல் இப் பகுதி புறக்கணிக்கப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை பிரதேசத் தலைவர் போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சர் பௌசிகனுடன் தொடர்பு கொண்டு எடுத்த முயற்சியினை அடுத்து இச் சேவைக்கு புதிய ரக பஸ் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. (க-43)

## வடமராட்சியில் கண்காட்சிகள்

(புலோலி)

வடமராட்சி வலயக்கல்வித் திணைக்களம் முறை சார்ந்த கல்விக் கண்காட்சியொன்றையும், முறைசாராத கல்விக் கண்காட்சியொன்றையும் எதிர்வரும் 11ம், 12ம், திகதிகளில் நடாத்தவுள்ளது.

முறைசார்ந்த கல்விக் கண்காட்சி பருத்தித்துறை வட- இந்து மகளிர் கல்லூரியிலும், முறைசாராத கல்விக் கண்காட்சி பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் நடைபெறுமென வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சிவராஜா தெரிவித்தார். (க-52)

# உத்தேசத் தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்கவும்

## ஜனாதிபதி- வரதர் சந்திப்பில் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவை அலரிமாளிகையில் சந்தித்து முக்கியவிடயங்கள் பற்றிப் பேசியுள்ளார்.

சுமார் ஒருமணித்தியாலம் வரை இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையின்போது இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்ட யோசனைகளை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு வரதராஜப்பெருமாள் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை [இனப்பிரச்சினைதொடர்பாகத் தாம் தமிழ்க்கட்சியுடன் நடத்திய கலந்துரையாடல் தமக்குத் திருப்தியளிப்பதாக ஜனாதிபதி வரதராஜப்பெருமாளிடம் தெரிவித்ததாகவும் தெரியவருகிறது.

இச்சந்திப்பின்போது புனர்வாழ்வு, புனரமைப்புப் பற்றிய விடயங்களும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இளைஞனைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சேதுநாதன் காண்டீபன் (வயது 25) என்பவர் கடந்த 2 ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டார் எனவும் அவர் இதுவரை வீடுதிரும்பவில்லை எனவும் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த செல்வராசா நந்தகுமார் (வயது 23) என்பவரும் சிவன் பண்ணை வீதி கொட்டடியைச் சேர்ந்த சேதுநாதன் சுதர்ஷன் என்பவரும் ஊரெழு இராணுவத்தால் கைது செய்யப்பட்டதாகவும் யாழ். மனித உரிமை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

செல்வராசா நந்தகுமார் என்பவர் ஏற்கனவே ஊரெழு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விடுதலையானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-4)

### வடக்கு- கிழக்கு மாகாண

## சமுர்த்தி அதிகார சபையால் தொழில்நுட்ப அலுவலர் நியமிக்கப்படுவர்

(மட்டக்களப்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சமுர்த்தி அதிகார சபையின் கீழ் பணியாற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிரதி சமுர்த்தி ஆணையாளர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, அம்பாறை ஆகிய சமுர்த்தித் திட்டம் அமுலில் உள்ள மாவட்டங்களில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் தலா ஒருவர் நியமிக்கப்படவுள்ளனர்.

ஓய்வு பெற்றவர்களும் தகுதி உடையவர்களும் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர் ஊடாக இம் மாதம் 8-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கலாம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-60)

### யாழ். மாநகரசபைக்கு தேவையான

## தீயணைப்பு இயந்திர உபகரணங்கள் இன்னும் சில வாரங்களுள் தருவிக்கப்படும்

### - பொறுப்பதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை தீயணைக்கும் படைப்பிரிவுக்கு தேவையான முக்கியமான இயந்திர உபகரணங்கள் அடுத்த சில வாரங்களுள் வந்து சேரவுள்ளன.

கொழும்புத்துறைமுகத்திலிருந்து கப்பல் மூலம் அவை இங்கு எடுத்துவரப்படுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநகர சபையின் தீயணைப்புப் படைப்பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கனேடிய அரசாங்கம் வழங்கிய நிதியுதவி மூலமே இவ் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

ஏறத்தாழ முப்பத்திமூன்று லட்சம் ரூபாய் பெறுமதியான தீயணைப்பு இயந்திர சாதனங்களை யாழ். மாநகர சபை கொள்வனவு செய்கிறது.

கடந்த பலகாலமாக செயற்படும் வலு குறைவடைந்த நிலையில் இருந்த யாழ். மாநகர தீயணைப்பு படைப்பிரிவு இதன் மூலம் ஓரளவேனும் புத்துயிர்ப்படையும் என நம்பப்படுகிறது. எனினும் தொடர்ந்தும் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாக கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## தவணைப் பணம் கட்டத்தவறியமைக்காக குற்றப் பணம் அறவிடப்பட்டது

### வடமராட்சியில் சம்பவம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி மயிலிட்டித் துறை கடற்றொழிலாளர்கூட்டுறவுச் சமாசத்தில் கடன் பெற்ற ஒருவர் தவணைப் பணம் கட்டத்தவறியமைக்காக அவர்மீது குற்றப்பணம் அறவிடப்பட்டது.

யு.என்.எச்.சி.ஆர் மூலம் மேற்படி சமாசத்திற்கு வழங்கப்பட்ட கடனுதவி மூலம் இக்கடன் வழங்கப்பட்டதாகவும் ஆனால் கடன்பெற்றவர் இக்கடனைத் திருபபி செலுத்தவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு குற்றப் பணம் அறவிடும் நிகழ்வு எந்த ஒரு சங்கத்திலும் இடம்பெறுவதில்லை எனவும் சம்பந்தப்பட்ட நபர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (க-43)

### பிரபல பொப் இசைப்பாடகர்

## மைக்கல் ஜக்சனின் சப்பாத்து 6700 டொலருக்கு ஏலம்

(லண்டன்)

லண்டனில் அண்மையில் நடந்த ஏல விற்பனையொன்றில் பிரபல பொப் இசைப்பாடகர் மைக்கேல் ஜக்சனின் ஒரு சோடி சப்பாத்து ஆறாயிரத்து 700 அமெரிக்க டொலருக்கு விற்பனையாகியது. பாடகரின் கையெழுத்து இரு சப்பாத்துக்களிலும் இடப்பட்டதாலும் பலத்த போட்டி நிலவியதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (து)

## சர்வதேச நீதிமன்றத்தின் முன் பன்னாட்டு இராணுவ அதிகாரிகள்

(ஹேக்)

ஹேக் நகரிலுள்ள சர்வதேச நீதிமன்றம் போர்க் குற்றங்களுக்காக பொஸ்னியாவைச் சேர்ந்த குறோசியரான முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் ரிமஹிர் பிளாஸ்கிச் என்பவருக்கு நாற்பத்தைந்து ஆண்டுகால சிறைத்தண்டனையை அறிவித்துள்ளது.

1992-ம் ஆண்டுக்கும் 1994-ம் ஆண்டுக்கு மிடையில் முஸ்லிம் மக்களின் பிரதேசமான மத்திய பொஸ்னியாவில் இவர் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு தலைமை வகித்தார் என்பதே இவர் மீது சுமத்தப்பட்டிருந்த போர்க்குற்றமாகும். அங்குள்ள அகமட்ச்சி என்ற கிராமத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கொலை செய்யப்பட்டதில் ஜெனரல் பிளாஸ்க்கிச் முக்கிய பங்காற்றினார் என்றும் போர்க் குற்றங்களை விசாரிக்கும் சர்வதேச நீதிமன்றம் அறிவித்தது.

சர்வதேச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி குளோஜ் ஜோடஸ் சர்வதேச சமூகங்கள் தமது நாடுகளை ஆளும் அடிப்படை விதிமுறைகளை சரியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

முன்னாள் யூகோஸ்லாவியாவின் போர்க்குற்றங்கள் மிகப்பிரபலமான தலைவர்களானபொஸ்னிய சேர்பியத் தலைவர் ரடவான் கரவிச், சேர்பிய ஜனாதிபதி சுலவடான் மிலோசவிச் ஆகியோர் மீதும் சுமத்தப்பட்டுள்ளன. இவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என பிரெஞ் ஜனாதிபதி ஜாக்சிராக் அறிவித்துள்ளார். (க-து)

## சித்திரவதை புரிந்த சிலியின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் மீது விசாரணை

(சன்ரியாகோ)

சிலியின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் அகுஸ்ரோ பினிசே தலைநகர் சன்ரியாகோ போய்ச் சேர்ந்தார். ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் மருத்துவச் சிகிச்சைக்காக பிரிட்டன் சென்ற பொழுது அவர்அங்கு கைது செய்யப்பட்டமை தெரிந்ததே. பினிசேவந்திறங்கிய விமான நிலையத்துக்கு செய்தியாளர்களோ படப்பிடிப்பாளர்களோ அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று சிலிநாட்டு படை அதிகாரிகள் முன்னரே தெரிவித்திருந்தனர். சிலி இராணுவம் ஜெனரல் பினிசே திரும்பி வருவதற்கான சகல ஆயத்தங்களையும் செய்திருந்தது என சிலி அரசாங்கம் தெரிவித்தது.

பினிசேயின் விமானம்தரை இறங்கியதும் அவர் தலைநகரிலுள்ள இராணுவ மருத்துவமனைக்கு கூட்டிச் செல்லப்பட்டார்.

அவர் மீதான சித்திரவதைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்வதற்காக அவர் ஸ்பெயினுக்கு நாடுகடத்தப்படமாட்டார் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்ததையடுத்தே அவர் தனது சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

அவர் நீதி விசாரணைக்கு உட்படக்கூடிய உடல்ஆரோக்கியத்தில் இல்லை என்றும் பிரிட்டிஷ் உள்த்துறைஅமைச்சர் அறிவித்திருந்தார். எனினும் அவர் மீதான குற்றச்சாட்டுக்களை ஏதோ ஒரு வகையில் நீதிவிசாரணைக்கு உட்படுத்த வேண்டி வரலாம் என்றும் தற்போதைய சிலி தலைவர் தெரிவித்துள்ளார். (து)

## ஜப்பானில் நிலநடுக்கம்

(ரோக்கியோ)

நேற்று மத்திய ஜப்பான் பகுதியில் மிதமான நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

நில நடுக்கத்தினால் ஏற்பட்ட உயிர்ச்சேதம் பற்றிய தகவல்கள் எவையும் இதுவரை வெளிவரவில்லை. (க-9)

### பீஹார் மாநிலத்தில்

## இருவேறு மோதல் சம்பவங்களில் தீவிரவாதிகள் உட்பட 18 பேர்பலி

(புதுடில்லி)

பீஹார் மாநில ஜகானபாத் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இருவேறு மோதல் சம்பவங்களில் 11 தீவிரவாதிகள் 2 பொலிஸார் உள்ளிட்ட 18 பேர் பலியாகி இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மக்கள் போர்க்குழு மற்றும் மத்திய துணை இராணுவப் படை ஆகியன தீவிரவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டபோதே மேற்படி கொலைகள் இடம்பெறுவதற்குக் காரணம் எனத்தெரியவருகிறது.

இம் மோதல் சம்பவங்களில் 12 தீவிரவாதிகள் மற்றும் இரு பொலிஸார் காயமுற்றிருப்பதாகவும்,

தீவிரவாதிகளிடமிருந்து ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள் மற்றும் வெடிப்பொருட்களைக் கைப்பற்றி இருப்பதாகவும் இந்திய பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. (க-9)

## சுயாதீனமான செச்சினியா உருவாக ரஷ்யாவை உதவுமாறு கோரிக்கை

(லிஸ்பன்)

ரஷ்யாவெளிவிவரகஅமைச்சர் போத்துக்கல் தலைநகர் லிஸ்பனில் மற்றும் ரஷ்யா அதிகாரிகளுடன் ஐரோப்பிய யூனியன்அதிகாரிகளும் அமெரிக்கவெளிவிவகார அமைச்சர் மெடலின் ஒல்பிறைந் அம்மையாரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர்.

ரஷ்யா தனது இராணுவ நடவடிக்கைகளை செச்சினியாவில் உடனே நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற செய்தியை அமெரிக்கா மிக வலுமிக்க வார்த்தைகளில் தெரிவித்துள்ளது என்று தெரியவருகிறது.

செச்சினியாவில் தற்பொழுதுபோர் முடிவடைந்துவிட்டது எனறும் செச்சினிய மக்களுக்குசகஜவாழ்க்கையை அமைத்துக்கொடுப்பதில்தாம் ஈடுபட்டுள்ளதாகவும் ரஷ்யர்கள்கூறினர்.

செச்சினியப்போரில் ரஷ்யப் படைகள் செய்த அட்டூழியங்களை விசாரணை செய்யும் அதிகாரத்துடன் மனித உரிமை அலுவலர்கள் சுயாதீனமாக செச்சினியாவில் செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும் என இப் பேச்சுக்களில் ரஷ்யாவிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. செச்சினியப் பிராந்தியத்தில் ஆயிரக்கணக்கில் அகதிகளாக சிதறுண்ட நிலையிலுள்ள மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கும் ரஷ்யா ஒத்துழைக்க வேண்டும் என்றும் ஐரோப்பியர்கள் வலியுறுத்தினர். (து)

## குண்டுவெடிப்பு

(டாக்கா)

பங்களாதேஷிற்கான அமெரிக்க அதிபரின் விஜயத்தை ஒழுங்கு செய்வதற்காக தலைநகர் டாக்கா வந்தகுழுவினர் தங்கியிருந்த விடுதியில் குண்டு ஒன்றுவெடித்ததில் ஒருவர் காயமடைந்தார். (து)

### தமிழ்க் கைதிகளை விடுவிப்பதில்

# ஆயிரக்கணக்கில் இலஞ்சம் வாங்கிய பொலிஸ்காரர் கைது செய்யப்பட்டார்

(திருமலை)

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விடுவிப்பதில் ஆயிரக்கணக்கில் இலஞ்சம் வாங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள சிங்கள பொலஸ்காரரர் ஒருவர் திருகோணமலைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட நபர் உயர் அதிகாரிகளுக்கு பொய்யான தகவல்களை வழங்குவதன் மூலம் மோசடிகளைச் செய்து கைதிகளை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டதுடன் இதற்கென 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபா வரை இலஞ்சமாக வாங்கினார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சமீப காலமாக இவர் 40 ஆயிரம் ரூபா வரை இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டதாகவும், 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்றையும்இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]

## அன்பளிப்பு

(கொடிகாமம்)

யாழ். கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நிலவிவந்த குடிதண்ணீர் தட்டுப்பாட்டினை நீக்கும் வகையில், கொடிகாமம் வணிகர் மன்றத்தினர் தண்ணீர் தாங்கி ஒன்றினை பாடசாலை வளவில் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

(க-28)

# புரிந்துணர்வுடன்கூடியஒற்றுமையே வாழ்வின்வெற்றியாகபரிணமிக்கிறது

### உதவிக் கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''வலைப்பந்தாட்டத்தை நல்ல முறையில் ஆடப்பயின்று கொள்ளும் ஒருவர் நல்ல முறையில் வாழவும் பயின்று கொள்கிறார். குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ஒரு இலக்கை நோக்கிக்கடும் முயற்சி செய்ய இவ்விளையாட்டுப் பயிற்சி உதவுகிறது. தனது அணிக்குள் ஒருவரை, ஒருவர் விளங்கிக் கொண்ட திட்டமிட்ட ஒற்றுமை இருக்கும்போது தான் எதிரணியுடன் காத்திரமான போட்டியிடல் சாத்தியமாகிறது. அதே போல ஒரு குடும்பத்தில், ஒரு பாடசாலையில் புரிந்துணர்வுடன் கூடிய ஒற்றுமை ஏற்படும் போதுதான் வாழ்வில் வெற்றி சாத்தியப்படும்''

இவ்வாறு சங்கானைக் கோட்ட வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட, அரசசார்பற்ற நிறுவனங்களின் கல்விச் செயற்பாட்டு இணைப்பாளரும் உதவிக்கல்விப் பணிப்பாளருமான திருமதி. கோகிலா மகேந்திரன் குறிப்பிட்டார்.

சங்கானைக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. செல்லையா தலைமையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்ற மேற்படி போட்டியில் 15 வயதின் கீழ்ப்பிரிவில் விக்ரோறியாக் கல்லூரியும் 17 வயதின் கீழ்ப் பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரியும் 19 வயதின் கீழ்ப்பிரிவில் வட்டு.மத்திய கல்லூரியும் கோட்டமட்டச் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

# கருஉருவாகும்போதே அவரவர் விதி நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றது

### எல்லாம் விதிப்படியே நடக்கும்

பிரபல சோதிட மேதை ஆர் முத்துகிருஷ்ணன் எழுதிய சோதிட ஆய்விலிருந்து கடந்த வாரம் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையின் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது.

### திருமண வாழ்வும் சோதிடமும்

மனித இன வளர்ச்சிக்கு ஆண், பெண் சேர்க்கை என்பது அவசியம். ஆனால் இது தவறான முறையாக மாறிய போது, ஆன்றோர்கள் திருமண முறை என்கின்ற வதுவைச் சடங்கினை உருவாக்கினர். இதுவும் கோள்களின் கதிர்வீச்சின் வளர்ச்சியே.

எங்கோ மலையில் விளைந்த நாரத்தங்காயும், எங்கோ கடலில் விளைந்த உப்பும் இணைந்து நல்ல ஊறுகாய் ஆவது போன்று. எங்கோ எங்கோ பிறந்து வளர்ந்தவர் இணைந்து கணவன் மனைவி ஆவது திருமணச் சடங்கால் என்பது உண்மை.

காலத்தின் வளர்ச்சியால் கோள்களின் தாக்கத்தால் திருமணங்கள்.

★ பெற்றோர்களால் முடித்துவைப்பது.

★ காதல் திருமணங்கள்.

★ களவுமுறை வாழ்க்கை.

என பலவாக அமைந்தன. இவற்றிற்கெல்லாம் காரணம் கோள்கள்தான்.

சோதிட அறிவின் வளர்ச்சியில், எவரெவர்க்கு எப்போது திருமணம் நடக்கும், எப்படி நடக்கும் எத்தனை திருமணம் நடக்கும் காமத்தின் அளவு என்ன, கற்பு வாழ்க்கை வாழ்பவரா, களவுநிலை வாழ்க்கை வாழ்பவரா என்பதை உணரமுடிகிறது.

லக்கினத்திற்கு ஏழாம் பாவம் ஏழாம்அதிபதி, ஏழாம் அதிபதி இருப்பு, சுக்கிரன் செவ்வாய் என்பன கொண்டும் பெண்களுக்கு மேலும் லக்கினத்திற்கு நான்காம் இடம் கொண்டு கற்பு நிலை குறித்தும் ஆராயப்படுகின்றன. இதுபோன்ற பல் வழிகளிலும் ஆராயப்படுகின்றன. இவ்வாறான முக்கிய சமூக நிகழ்ச்சிக்குக் காரணம் கருத்தாக்களை காண்பதற்கு சோதிட சாஸ்திரம் தெளிவாக உதவுகின்றது.

### கவர்ச்சி நிலையும் சோதிடமும்

திருமண உறவு என்பதில் பலநிலை உள்ளதை உணர்வோரம். இவ்வாறான நிலைகளில், ஆண், பெண் இருவருக்கும் இடையில் ஏற்படும். கவர்ச்சி, நிலைகள். (1)உடல்கவர்ச்சி, (2)உள்ளக் கவர்ச்சி, (3) உயிர்க்கவர்ச்சி என மூவகைக் கவர்ச்சி நிலைகள் உள்ளன. இவற்றினை எல்லாம் உருவாக்கித் தருவன கோள்கள் என்பது உண்மை.

ஒருவர் கண்ணுக்கு பிடிக்காத பெண் அல்லது ஆண், இன்னொருவருக்கு பிடித்தம் உள்ளவர் ஆவர். ஒரு நேரத்தில் பிறர்க்கு பிடிக்காதவர், மற்றொரு நேரத்தில் அனைவருக்கும் பிடித்தம் உள்ள கவர்ச்சி நிலையை அடைகின்றனர். இதற்கெல்லாம் காரணம் கோள்கள் என்பது உண்மை. இதனை சோதிடக் கலை வாயிலாக எளிதில் உணரலாம்.

### கல்வியும் சோதிடமும்

சமுதாய வளர்ச்சிக்கும், விழிப்புணர்வு பெறுவதற்கும் கல்வி என்பது அவசியம். மனிதர்களின் இறந்தகாலம் நல்ல அனுபவக் கல்வியை தருகின்றது. எதிர்காலம் நன்மை பெற, நிகழ்காலத்தில் அடைவது அறிவுக்கல்வி அதாவது ஏட்டுக்கல்வி. இந்த அறிவுக் கல்வி முன்னோர்களின் அனுபவக் கல்விதான். இவ்வாறான உயரிய கல்வியை பெறுவதற்கு அடிப்படையாக அமைவது சோதிடக்கலை..

## சோதிட பலன்

கற்றுத்தேர்ந்து, ஆசிரியர், வழக்கறிஞர், மருத்துவர் எனபல துறைகளில் ஈடுபாடு கொண்டு அவரவர் விதிக்கு ஏற்ப வாழ்கின்றனர். இதற்குக் காரணம் கோள்கள் தான். அவரவர் விதிக்கு ஏற்பத்தான் கல்வி என்பன அமைகிறது. எவ்வளவு முயன்றாலும், கல்வி அமையும் அளவுதான் அமைகின்றது. இதுதான் கோள்களின் செயல்.

மனிதர்களின் உடல்நலம், என்பனவெல்லாம், பிறப்பின் விதிக்கு ஏற்பவே அமைகின்றன. சிலர் நல்ல உடல் உரத்துடன் வாழ்வதும், சிலர் நோயாளிகளாக வாழ்வதும் எல்லாம் விதியின் செயல் தான்.

### சோதிடமும் குடும்பமும்

இவ்வாறாக பலவற்றினை அறிய உதவும் சோதிடத்தின் வழியாக குடும்ப நிலைகுறித்தும் அறியலாம். தாய், தந்தை, உடன்பிறந்தவர், தாய்வழி பாட்டன், பாட்டி, தந்தை வழி பாட்டன். பாட்டி, மாமன், அத்தை எனபல சகல உறவு முறைகளையும், அவர்களின் நிலை குறித்தும் அறிய உதவுவது, சோதிடக்கலை என்பது உண்மையாகும்.

### சோதிடத்தின் சமுதாயப்பயன்

இவ்வாறு பல வழிகளில், மனிதர்களின் தன்மையை உணர உதவும் சோதிடக் கலை சமுதாயத்திற்கு தருகின்ற பயன்கள் என்னவெனில்,

★ பிறப்பின் நிலையை உணர்ந்து, மனிதர்களாக பிறந்த நாம் மனிதர்களாக வாழ வழிவகைக் காட்டுவது

★ சமுதாயத்திற்கு பயன்படும்படிவாழப்பயன்உருவாக்கித்தர வழிவகுத்து கூறுகிறது.

★ இறந்த கால வாழ்வை எண்ணி வாடாது, அமைதி பெற்று வாழ்வதற்கு உதவுகிறது.

★ சமுதாயம் என்ற இந்த மாபெரும் அமைப்பின் நன்மைகள் பல மறைந்து விடாது, தொடர்ந்து நடைபெற உதவுவது சோதிடவியல்.

★ இயற்கையின் சூழ்நிலைக்கு ஏற்ப, மனிதன் தன்னை வாழ உருவாக்கிக் கொள்வதற்கு உதவுவது.

★ ஊக்கம் உடையவர், ஆக்கம் உடையவர், நல்லவர், நல்ல மனிதர், இறைத்தன்மை கொண்டவர், ஆளுமைமிக்கவர் என்பது போன்றவற்றை முன்னமே அறிய உணர்த்துவது.

★ ஆன்மீகம், ஞானமார்க்கம், மெய்ஞானமார்க்கம் என்பன வ்ளர்ந்திட, உருவாக்கிட வழிவகுப்பது சோதிடவியல் என்பது தெள்ளத்தெளிவான ஒன்று.

இவ்வாறாக பல நன்மைகளுடன் சகலகாரியங்கள் செய்ய, நல்ல நாள், நல்ல நேரம் என பார்த்திட உதவுவது சோதிடவியல். இவ்வாறாக பல வழிகளில் சமூக வளர்ச்சிக்கு உதவிடும் சோதிடவியலை காத்து வளர்ப்போமாக.

குறிப்பு:-

அடுத்த ஞாயிறு ''அதிஸ்ட்ட எண் பலன்'' கட்டுரை பிரசுரமாகும்.

# கிணற்றில் கிடந்த சடலத்தின் மீதான விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

புற்றளை சித்தி விநாயகர் ஆலய கிணற்றில் கைகால் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட கணபதிப்பிள்ளை பத்மநாதன் என்பவரின் சடலத்தின் விசாரணைகள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி எஸ், ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் கடந்தவியாழன்இவ்வழக்குவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது யாழ், சட்டவைத்திய அதிகாரி இ. இராஜேஸ்வரனும் சமூகமளித்திருந்தார்.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பொலிஸார் தவணைகேட்டதை அடுத்தே நீதிபதி இவ்வழக்கை ஒத்தி வைத்தார்.

இம்மாதம் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான் புதைகுழியிலிருந்து தோண்டி எடுத்தசடலத்தை சட்டவைத்தியஅதிகாரியின்பரிசோதனையின்பின் கொழும்பு இரசாயனப் பகுப்பாய்வாளர் பிரிவிற்குஅனுப்பவேண்டும் என்றும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (வ-52)

## போட்டி முடிவுகள்

(அச்சுவேலி)

ஆவரங்கால் சிவன்தேவஸ்தான இந்து இளைஞர் மன்றம் நடாத்திய சமயஅறிவுப் போட்டி முடிவுகள்:-

**மேற்பிரிவு**

1 ஆம் இடம் த. ரேகா
2 ஆம் இடம் இ. சுபாசினி
3 ஆம் இடம் யெ. ஜெயசிறி
4 ஆம் இடம் க. பிரதீபா
5 ஆம் இடம் த. வதனறூபி

**மத்தியபிரிவு**

1 ஆம் இடம் வி. வஸ்யந்தி
2 ஆம் இடம் க. சோபனா
3 ஆம் இடம் க. எழில்செல்வி
4 ஆம் இடம் இ. சிவகாமி
5 ஆம் இடம் ந. ஜெயந்தி

**கீழ்ப்பிரிவு**

1 ஆம் இடம் க. சசருசா
2 ஆம் இடம் ச. ஜோதிகா
3 ஆம் இடம் சி. சிந்துஜன்
4 ஆம் இடம் த. சேந்தன்
5 ஆம் இடம் செ. பானுசா

மேற்படி நபர்களிற்கான பரிசில்கள், சான்றிதழ் வழங்கும்வைபவம் நேற்று மாலை ஆவரங்கால் சிவன்தேவஸ்தானத்தில் இடம்பெற்றது.

திரு. திருமதி கணபதிப்பிள்ளை, திரு. சோமசுந்தரம் ஞாபகார்த்த பரிசில்களை பிரதமகுரு வே. நடராஜக் குருக்கள் வழங்கினார்.

(க-57)

## காத்தான்குடியில் 5 பேர்கைது

(மட்டக்களப்பு)

ஒரே இடத்தில் கஞ்சா வைத்திருந்த ஐந்து நபர்களை காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐந்து நபர்களும் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி கா. தட்சணாமூர்த்தி அவர்களின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்நபர்கள் தனித்தனியே 510 கிராம், 300 கிராம், 185 கிராம், 40 கிராம், 25 கிராம் கஞ்சாவை வைத்திருந்தனர் எனத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது தனித்தனியே வழக்குத் தாக்கல் செய்யப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (க-60)

## இராஜேஸ்வரனுக்கு கலாநிதிப்பட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பி. இராஜஜேஸ்வரனுக்கு யாழ். பல்கலைக் கழகத்தால் கலாநிதிப்பட்டம் வழங்கப் பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டினதும். அதன் அயலில் அமைந்துள்ள தீவுகளினதும் உருவவியல் அம்சங்கள் பற்றி அவர் மேற் கொண்ட ஆய்வுக்காகவே இப் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. (ந)

# சுயதொழில் திட்டத்தில் மட்டக்களப்பில் 411 பேர் இணைவு

சமூக சேவைகள் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சுயதொழில் திட்டத்தில் ஈடுபட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் ஜன ஜெய ஒய்வூதிய சமூக பாதுகாப்பு திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 411 பேர் இணைந்துள்ளதாகவும் இத்திட்டத்தின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

செங்கலடி பிரதேச செயலக பிரிவில் 206 பேரும் மட்டக்களப்பு பிரதேசபிரிவில் 74 பேரும் இணைந்துள்ளனர். ஏனைய பிரிவில் குறைந்த அளவிலேயே இத்திட்டத்தில் சேர்த்துள்ளனர்.

இத்திட்டத்தில் இணைந்துள்ளவர்களுக்கு 60 வயதுக்கு மேல் காப்புறுதி வழங்கப்படுவதுடன் அங்கவீனம் மற்றும் பாதிப்பின்போது இழப்பீடு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-60)

கோளில் பொறியில் குண
மிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.
- குறள்

# வலம்புரி

## அன்பு துலங்க ஆணவம் .....

தேவர்கள் மத்தியில் ஆணவம் வியப்பாக விருக்கிறதா? திருமாலும், நான்முகனுமியாா பெரிது என்ற சர்ச்சையில் ஈடுபட்டனர். பரம் பொருளின் அடியையும் முடியையும் தேடுவதே அவர்கள் பலப் பரீட்சைக்குப்பரீட்சையாய் இருந்தது.

வராகமாய் திருமாலும் அன்னமாய் நான்முகனும் அடியையும் முடியையும் தேடியது இதிகாசச் செய்தி. ஈற்றில் அன்பே உருவான கூத்தன் சோதிப்பிளம்பாய் காட்சி கொடுத்து அன்பினால் அவர்களை ஆட்கொண்டு ஆணவம் போக்கினார் என்பது சமயப் பேருண்மை.

இன்றைக்கு அன்பைத் தேடி அலைகின்ற அரசியற்கட்சிகள் ஆணவம் போக்கி அடியையும் காண வேண்டும் பரிகார மாக முடியையும் தேட வேண்டும். அந்தமுடிவு முட்டற நிலைக்க வேண்டும்.

மனிதமட்டத்தில் ஆணவம் ஒரு பொருட்டல்ல தான். ஆயினும் அதனைத்தழைக்க விட்டால் வந்த தாழ்வினை இன்றே உணரவேண்டும். இடையில் நெரிந்து இன்னல் படுவோரை- இன்னுயிர் நீப்போரை காலந்தாழ்த்தாது காப்பாற்றவும்வேண்டும்.

அந்த ஒன்றுக்காகத் தான் சமாதானம் எனும் சிசு என்று பிறக்கும் என ஏங்குகின்றார்கள்- கண்ணீர் விட்டே வளர்த்தோம் சர்வேசா- கருகத் திருவுளமோ என்று கவி உள்ளத்தினூடேசுதந்திரத்தின் மேன்மை பேசப்படுகிறது.

பெற்ற சுதந்திரத்தைப் பேணுதல் இங்கு உற்றவர் அனைவர்க்கும் உரிமையே.

எல்லாவற்றிற்கும் மேலாக பிறப்புரிமை சுதந்திரம் என்பது மனித உள்ளங்களால் பேணப்பட வேண்டியதே. நம் நாட்டில் அத்தகைய உள்ளங்கள் பெரும்பான்மை யாக இருந்தால் பல்கிப் புலம் முளை கொண்டிராது வெட்கப்பட வேண்டியது என்னவெனில் பல கற்றும் புரிந்துணர்வும்- பொது நலமும் வெறுமையாக விருப்பதுதான்.

தன்னலமற தழைக்கும் நாடு. யாவரும் கேளிர் என்ற பூங்குன்றன் வாக்கின் புதுப்பொலிவுபெறும் சமாதானச் சிசு தவழ்ந்து விளையாடும்.

- அன்புடன் ஆசிரியர்

# ஸ்ரீலங்கா படையைச் சேர்ந்த பெண் தோட்டத்தில் சடலமாக மீட்பு

### - நாகமவில் சம்பவம்

(கொழும்பு)

பல மாதங்களுக்கு முன் காணாமற்போன ஸ்ரீலங்கா பெண்கள் படையணியைச் சேர்ந்த 24 வயதுடைய இளம் யுவதியின் சடலம் நாகம பகுதி வர்த்தகர் ஒருவரின் தோட்டத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இது பற்றி தெரிய வருவதாவது,

அநுராதபுர எல்லைக் கிராமம் ஒன்றில் காவல்பணி புரிந்து வந்தசெவ்வந்தி விஜய சேகர என்ற இளம் பெண் பிரபல ஸ்ரீலங்கா தொலைக்காட்சி நாடக இயக்குநர் ஒருவருடன் காதல் உறவு கொண்டிருந்தார்.

கடந்த 5 மாதங்களுக்கு முன் கடமையில் இருந்த வேளை மேற்படி ஸ்ரீலங்கா படையணியைச் சேர்ந்த யுவதியை நாடக இயக்குநர் அழைத்துச் சென்றிருந்தார். அதன் பின்பு அப்பெண் கடமைக்குத் திரும்பவில்லை.

அண்மையில் நாகமை பகுதியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டுத்தோட்டத்தில் இளம் யுவதியின் சடலம் இரகசியமாக புதைக்கப்பட்டிருப்பதை அறிந்து அப்பகுதி பொது மக்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வர்த்தகருக்கு சொந்தமான 8 வாகனங்களையும், வீட்டையும் தீ வைத்துக் கொளுத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து கம்பகா மாவட்ட நீதிபதி தோட்டத்தில் உள்ள சடலத்தை தோண்டி எடுக்கு மாறு கட்டளையிட்டார்.

நூற்றுக்கணக்கான பொது மக்களின் முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டபட்டுடன் புதைக்கப்பட்டிருந்த சடலம் தனது மகளான செவ்வந்தி விஜயசேகர வினுடையதென தாயார் இனம் காட்டியுள்ளார்.

இம் மரணம் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறும் பொருட்டு ருகுணு சட்ட மருத்துவ பீடத்தின் உதவியை நீதிமன்றம் நாடியுள்ளது.

இது விடயம் தொடர்பாக எவ்வித தகவலும் படை முகாம் பொறுப்பதிகாரி மட்டத்தில் இருந்து கிடைக்காதது குறித்து சம்பந்தப்பட்டபெண்ணின் பெற்றோர் விசனமடைந்துள்ளனர்.

(க-9)

## சிற்றூழியர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கல்விச் சிற்றூழியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணைநாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இதில் சகலசிற்றூழியர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ந)

## 'துடிப்பு' சஞ்சிகை வெளியீடு

[சுச்சமோட்டை]

யாழ். புனித அன்னாள் கிறிஸ்து அரசர் ஆலய இளைஞர் ஒன்றியத்தினால் மாதந்தோறும் 'துடிப்பு' என்னும் சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றது.

இச்சஞ்சிகை கடந்த ஒரு வருட காலமாக இளைஞர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்டு வருகின்றது.

ஆன்மீக, சமூகவியலை வளர்க்கும் ஆக்கங்களும், அவ்வக் காலங்களை ஒட்டிய சமகால நிகழ்ச்சிகளின் கண்ணோட்டங்களும் இச் சஞ்சிகையில் அடங்கியுள்ளது.

இம் முயற்சி இளைஞர்களின் ஒன்றுபட்ட அறிவியல் செயற்பாட்டிற்கு 'வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[க-59]

## வடமராட்சியில் கள்ளுத்தவறணையை மீண்டும் இயங்கவைக்க முயற்சி

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியில் கள்ளுத்தவறணையை இயங்கவைக்க பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் முயற்சியினை மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக மாமுனை இராணுவத்தினிடமும் பிரதேச செயலரிடம் அனுமதி கேட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்ததும் இந்தத் தவறணை இயங்கும் என கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச்சங்கம் இயங்காததால் இப்பகுதி விதிகளில் கள்ளு விற்பனையும், கசிப்பு விற்பனையும் தாராளமாக இடம் பெற்றுவருவதால் இங்கு பல சமூகச்சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன.

இதனையடுத்து இப்பகுதியில் உள்ள நலன் விரும்பிகளும், பொது அமைப்புக்களும் இதனைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து மேற்படி தவறணையை இயங்கவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(க-43)

## கொல்லப்பட்ட அன்ரன் சிவலிங்கத்தின் இறுதி நிகழ்வுகள் நேற்று நடந்தேறின

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் கடந்த 1ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட யாழ். மாநகர சபை ஈ.பி.டி.பி. உறுப்பினர் அன்ரன் சிவலிங்கத்தின் நல்லடக்க நிகழ்வுகள் நேற்று காலை நடைபெற்றன.

நேற்றுக் காலை 9.45 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து புறப்பட்ட இறுதி ஊர்வலம் 2ம் குறுக்குவீதியூடாக பிரதான வீதியை அண்மித்து அங்கிருந்து யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி சேமக்காலையில் 9.45 மணியளவில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன் (ஜெகன்) பாராளுமன்ற உறுப்பினர் சிவதாசன், கோப்பாய் பிரதேச சபைத் தலைவர், ஊழியர்கள் மற்றும் பிரமுகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(க)

## சாய்ந்த மருதுவில் இருபொலிஸார் காயம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு சாய்ந்த மருது அல்கமரேன் வித்தியாலயத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இரவு 7.30மணியளவில் இடம்பெற்றதுப்பாக்கிச் சூட்டில் இரண்டு பொலிஸார் படுகாயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இவ்விரு பொலிஸாரும் காயமடைந்தனர்.

காயப்பட்ட பொலிஸார் மேலதிக சிகிச்சைக்காக அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ந)

## மட்டக்களப்பில் தொடரும் மழை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழையினால் பயிர்கள் பெரிதும்சேதமடைந்துள்ளன.

இதனால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களில் அறுவடை செய்து குடலப்படுத்து தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த நெற்கதிர்கள் நீரில் மிதப்பதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

(க-60)

# பாவத்தை வெறுத்து பாவியை நேசிக்கும் இயேசு பாவ நிவாரணம் தருவார்

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களைமன்னித்துஎல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். பாவம் ஒரு மனிதனை வேத வெளிச்சத்தில் இருந்தும் தேவ சித்தத்திலிருந்தும் விலக்கி சுயநலத்தின் காரிருளுக்குள் நடத்திச் செல்கிறது.

ஆதியிலே ஆதாமிலும் ஏவாளிலும் ஆரம்பித்த பாவத்தின் விஷவித்து இன்று வரை வாழுகின்ற, வரப் போகின்ற மானிட சந்ததியிலும் கால காலமாய் நிலைத்து நிழல் தரும் விருட்சமாயுள்ளது. இந் நிலையினை மாற்றவே சிலுவை மரமேறிய இயேசு கிறிஸ்து பூமிக்கு அவசியமானார். பாவத்தின் பலனாகிய மரணம் ஆகிய சம்பளத்தை பெற்றிடும் பயத்தில் ஆதாமும் ஏவாளும் மரங்களின் பின்னே ஒளிந்திருந்தார்கள். ஆனாலும் தேவன், ஆதாமே எங்கே இருக்கிறாய் என அழைத்த போது நிர்வாணத்தோடு வெளிப்பட்டனர். ஒரு மனிதனுக்கு பாவம் கொடுக்கும் சுகம், சொத்து, செல்வம், எல்லாமே அந்தகார இருளுக்கும், அவலட்சணமான



அருவருப்புக்கும், எரியும் அக்கினிக்குமே வழிநடத்திச் செல்கின்றது.

அழைத்த தேவன் ஆதாமினதும் ஏவாளினதும் நிர்வாணம் காணப்படாதபடி கொல்லப்பட்ட மிருகத்தின் தோலால் உண்டான ஆடையைக் கொடுத்தார். தேவன் பாவத்தைவெறுத்து பாவியை நேசிக்கும் அன்பை இங்கு காண்கிறோம். பழத்தால் பாவியாகி, பயத்தால் பரமனை மறந்து, மனத்தால் குருடரான அவர்களை தேவன் நேசித்து புதிய ஆடை கொடுத்தார்.

இதுபோலவே பாவத்தின் பெருக்கம் பன்மடங்காகி உலகம் நரகத்திற்காக தன்னை ஆயத்தப்படுத்தும் போது தேவன் இவர்களை மீட்கும் தன்விஸ்டத்தின் திட்டத்தை உருவாக்கினார்.

### பரமபிதா காட்டிய பாதை

அத்திட்டமே இயேசுவும், அவரது கல்வாரிப்பாடுகள் மரணம், அடக்கம், 3ஆம் நாளில் உயிர்த்தெழுதல் போன்றவை.

தெய்வீக பிரமாணங்களை சுமந்த தேவ ஆட்டுக்குட்டியாய் இயேசு கிறிஸ்து சிலுவைக்குச் சென்று, தன் சொந்த இரத்தத்தை முற்று முழுதாக கடைசித்துளி இரத்தமும் கல்வாரியிலே சிந்தப்பட தேவன் திட்டமிட்டார்.

பாவத்தின் அகோரம் தணிக்கப்பட்ட அல்லதுஅதற்குப்பட பூமியின் மாந்தருக்கு இயேசுவின் இரத்தம்தேவனால் பட்டதை கல்வாரியின் பாடுகள் காண்பிக்கிறது. எனவே பிதா அன்று ஆதாமையும் ஏவாளையும் அழைத்து தோலுடை கொடுத்து புது வாழ்வு கொடுத்தார்.

அதேபோலவே இயேசுவும் தனது கடைசித்துளி இரத்தத்தையும் பூமியில் முக்காலமும் வாழும் மனிதர்களிற்காய் சிந்தி பாவ நிவாரணம் தந்து விட்டார். விசுவாசத்தோடு நாம் இதை ஏற்றுக் கொள்ளும் போது எம் வாழ்வும் புதிதாக மாற்றமடையும். இதுவே இரக்கமுள்ள தேவனின் அநாதித் தீர்மானம் ஆகும். தெய்வம் எப்படி பாவத்தை வெறுத்து பாவியை நேசித்தாரோ அதேபோல் மானிடமே நீயும் நேசி தேவாசீர் பெறுவாய்.

**ஏ. ஜோசப்ராஜ்**
யாழ்ப்பாணம்

# நாட்டில் நிரந்தர சமாதானம் வேண்டி 25ஆயிரம் 'மாணவர் ஆர்ப்பாட்டம்!

[கொழும்பு]

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டுமென்பதை வலியுறுத்தி நேற்று 25 ஆயிரம் மாணவர்கள் கலந்து கொண்ட மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடாத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் களுத்துறை, கம்பஹா கொழும்பு ஆகியமாவட்டங்களில் உள்ள மாணவர்களே கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டபேரணியில் கலந்து கொண்டவர்சுள்

★ யுத்தபலத்தில் இருந்து சிறுவர்களாகிய எம்மை மீட்டுவிடுங்கள்.

★ யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துங்கள்.

போன்ற சுலோகங்களைத் தாங்கிச் சென்றனர்.

ஆர்ப்பாட்டப் பேரணிமுடிவில் தக்கால் மார்க்கஸ் பெர்னான்டோ அருளாசி வழங்கிப் பேரணியைமுடித்து வைத்தார். [வ]

## ஐரோப்பிய ஆணைக்குழு

# வட.கிழக்கு புனரமைப்பிற்கு 68.9 மில். ரூபாய் ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் இடம் பெற்ற யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு வேலைத் திட்டம் ஒன்றினைத் தயாரிப்பதற்கு அகில உலக கெயர் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்புனர்வாழ்வு வேலைத் திட்டத்திற்கு ஐரோப்பிய ஆணைக்குழு 68.9 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுஸ்ளது.

திருமலை வவுனியா, புத்தளம், பொலநறுவ, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 5300 குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடையவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது [வ]

# பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் ஆயுதபாணிகள் தலைமறைவு

[மட்டக்களப்பு]

துறைமுக கப்பல்துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்பின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ. எல், ஹமீத்தின் மெய்ப்பாதுகாவலர்களாக கடமையாற்றிய இரு பொலிஸார் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இனந்தெரியாதோரால் சுடப்பட்டார்.

வயிற்றில் குண்டு துளைக்கப்பட்ட நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இருவருக்கும் தீவிரசிகிச்சையளிக்கப்பட்டுவருகிறது,

சம்பவதினம் இருவரும் உணவு விடுதி ஒன்றிற்கு உணவு அருந்தச் சென்ற வேளையில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

துப்பாக்கி நபர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பிலேயே இச் சம்பவம் இடம் பெற்றது. (க-60)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசெம்பர் மாதம் வடமராட்சி கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் உறவினர்கள் வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்குப் பகுதிகளான தாளையடி, வத்திராயன், உடுத்துறை மருதங்கேணி ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த 61 குடும்பங்களுக்கே ஜனவரிக்குப் பின்பு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# உயிரிழப்பு

பூநகரிப் பகுயில் நேற்று முன்தினம் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் கப்டன் காளி [அலெக்சாண்டர் ஜெலமி நடராஜா] மன்னார் என்ற போராளி உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

### அல்லாரை---

ஒருவரே படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (வ-21


ஸ்ரீ செல்வா
யாழ். ஸ்ரான்லி வீதி,
காலை 10-30 பி.ப 2.30
அருண் பாண்டியன் நடித்த
காக்கிச் சட்டையா கறுப்புச் சட்டையா
(புதிய வெளியீடு)
CD பிரதி
(00115)


# வீட்டிலிருந்த இளம்பெண் பாலியல் வல்லுறவிற்கு ஆளானார்

நெல்லியடி வடக்கைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் முகமூடி அணிந்த மூன்று பேர் தமது வீட்டுக்கதவைத் திறந்து தாம் மாலுசந்தி இராணுவ முகாமைச் சேர்ந்தவர்களெனக் கூறிக் கொண்டு தம்மை நெருங்கியதாகவும் அப்போது தான் சத்தமிடமுயன்றபோது துணியினால் தனது வாயைப் பொத்தியதோடு தம்மைப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தியதாகவும் பிரஸ்தாப பெண்மணி நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேலும் இச்சம்பவத்தின் போது தாம் நினைவிழந்து விட்டதாகவும் மீண்டும் கண் விழித்து பார்த்தபோது நெல்லியடிவடக்கில் வசிக்கும் நபர் ஒருவர் அங்கு காணப்பட்டதாகவும் அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை பாதிக்கப்பட்ட பெண் மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ந

## திருக்கேதீஸ்வரஆலயவழிபாடு

# கொழும்பு, மன்னாரிலிருந்து 190 பக்தர்களே கலந்து கொண்டனர்

(மன்னார்)

சிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கு நேற்று 190 பக்தர்கள் வழிபாடுகளை நடாத்திச் சென்றிருந்தனர்.

கொழும்பிலிருந்து இ.தொ காங்கிரஸ் எம்.பி.ஆர்.யோகராஜன் தலைமையில் 43 பக்தர்களும் மன்னாரிலிருந்து மாவட்ட அரச அதிபர் எஸ். விஸ்வலிங்கம் தலைமையில் 147பேரும் திருக்கேதீஸ்வரம் சென்றுள்ளனர்.

நேற்று மாலை 4 மணியளவில் மன்னார் விநாயகர் வித்தியாலயத்தை அடைந்து அங்கு தங்கி பின்னர் அங்கிருந்து திருக்கேதீஸ்வரம் சென்றனர் என்றும் தெரியவருகிறது,

இப்பக்தர்கள் இன்று பி.ப 2 மணிவரையே ஆலயப் பகுதியில் தங்கி நிற்க அனுமதி உண்டு. ஆகையினால் அவர்கள் 2 மணிக்கு அங்கிருந்து புறப்படுவார்கள் என்வும் தெரியவருகிறது.

இதேவேளை ஆலய வழிபாட்டில் விஷேட வழிபாடுகளிலும், பஜனை வழிபாடுகளிலும் மக்கள் ஈடுபட்டதாக தெரியவருகின்றது. (4)

# வயல்வெளியால் சப்பறம் தேர் உலாவர மிதிவெடிகளை அகற்றவும்

## இந்து தர்ம பரிபாலனம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் 9ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாக இருப்பதனால் ஆலயத்தைச் சுற்றியுள்ள வயல் வெளிகளிலுள்ள மிதிவெடிகளை அகற்றித்தருமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலரை மாதகல் இந்துதர்ம பரிபாலன சபை கேட்டுள்ளது.

மாதகல் இந்துதர்ம பரிபாலன சபை தனது வேண்டுகோளில் ஆலயத்தின் தேர், சப்பறத் திருவிழாவின் போது தேரும் சப்பறமும் வயல் வெளியூடாக வீதிவலம் வரவிருப்பதாலேயே இம்மிதிவெடிகளை அகற்றித் தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### பிரிட்டிஷ்---

தற்போதைய நிலையையும் நேரில் அவதானிக்கவுள்ளார்.

இதேவேளை பிரிட்டிஷ் தூதுர் யாழ் பிரதி மேயர் ரவிராஜை கொழும்பில் சந்தித்து உரையாடிய போது வெளி நாடுகளின் நிதியுதவி யாழ் மாநகர சபைக்கு சரியான முறையில் கிடைப்பதில்லை எனவும் இந்நிதியை பெற்றுத்தரும்படியும் பிரதி மேயர் ரவிராஜ் கேட்டுக் கொண்டார். (வ)

### மாலுசந்தி---

தெரிவித்துவிட்டுச் சென்றனர்

இதேவேளை அயலவரான பூரணம் பிள்ளை மண்டையோடுகளைப் புதைக்கவில்லை எனவும் இதுபற்றி மனிதநேய அமைப்புகளின் கவனத்திற்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மண்டையோடுகளை பெருமளவு மக்கள் சென்று பார்வையிட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மாமுனை---

அதிகாலை 4மணி முதல்பகல் பத்து மணிவரையும் மீன் பிடிப்பதற்கு இராணுவத்தினர் அனுமதிவழங்கியுள்ளனர்.

இராணுவத்தினரின் இந்த் நேரக்குறைப்பால் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரம். குடும்பத்தினர் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ-43)

## பச்சிலைப்பள்ளியில் தடகளப்போட்டி

பச்சிலைப்பள்ளி பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளன இளைம்ர் கழகங்களுக்கிடையில் நடத்தும் தடகள விளையாட்டுப் போட்டி இன்றுகாலை 9.00 மணிக்கு இத்தாவில் கெனடி விளையாட்டரங்கில் செ. நிமலரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது,

பளை பிரதேசசெயலர் க. புத்திசிகாமணி பிரதம விருந்தினராகவும் தேசிய இளைஞர் சேவைமன்ற உதவி இயக்குனர் ரீ. சிவதட்சணாமூர்த்தி மற்றும் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி அ. சக்திவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டுச்சிறப்பிப்பர் (ப-3)

## மஹோற்சவம்

வல்லை வைத்தீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பதினாறு நாட்கள் திருவிழா இடம் பெறும்.

### கறுப்பு..-

செல்லப்பட்டனர்.

திருக்கேதீஸ்வர ஆலய பார்துகாப்பு எல்லைகளை கடந்து செல்லும் போதே இவ்வாறு கறுப்புச் சேலையால் மூடிய நிலையில் பக்தர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

### ஜனாதிபதியின்,..

கிரமசிங்க 9ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வார் என உறுதிசெய்துள்ளார்,

ரணில் விக்கிரம்சிங்காவும் மேலும் நாலு ஐ, தே. க. உறுப்பினர்களைப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கு ஜனாதிபதி அழைத்திருந்த போதும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும ஏனைய உறுப்பினர்கள் யார், யார் என்பது பற்றி தீர்மானிக்கப்படவில்லை என்றும் காமினி அத்துக்கோறள தெரிவித்துள்ளார்,

அரசாங்கம் தமிழ்க்கட்சிகளுடன் இதுவரை காலமும் நடாத்திய பேச்சு வார்த்தை தொடர்பாகவும் பேச்சின் போது இணக்கம் காணப்பட்ட சில விடயங்கள் தொடர்பாகவும், இணக்கம் காணப்படாத பல விடயங்கள் குறித்தும் ரணிலுடன் கலந்துரையாடுவார்கள் எனவும் அறியப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து எதிர்காலத்தில் நடைபெறக் கூடிய பேச்சு வார்த்தைகள் சம்பந்தமான நிகழ்ச்சி நிரல் ஒன்றையும் தயாரிக்க முடியும் என்றும் ஜனாதிபதி தனது அழைப்பு மூலம் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே குறுகியகாலஅவகாசம் என்று கூறி ஒருகட்ட பேச்சுவார்த்தைக்கு சமுகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (வ)


SURIYA CHINESE
167, KASTHURIAR ROAD
JAFFNA
எம்மிடம் தரமான உணவு வகைகள் பெற்றுக்கொள்ள இன்றே நாட வேண்டிய இடம்
எமது தயாரிப்புகள்
★ சிக்கன் புரியாணி
★ மட்டன்புரியாணி
★ மரக்கறி புரியாணி
★ சிக்கன் நூடில்ஸ்
★ மட்டன் நூடில்ஸ்
★ முட்டை நூடில்ஸ்
மற்றும்!
(ஸ்பெசல்)
"பாலாண்டி"
"சூப்வகைகள்"
உங்கள் ஓடர்கள் விசேஷமாக கவனிக்கப்படும்.
(கி-110)


இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.